1 ஏப்ரல் 2018

அல்லேலூயா, ஆண்டவர் உயிர்த்து விட்டார்

# Newbec

NEW WAY OF BEING CHURCH

ஈஸ்தர் ஞாயிறு

## எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்




Art: Johan Ludwig Lund (1777-1867), "The Resurrection of Christ" from Wikimedia Commons

வேதனை வழி மீட்பு கொண்டு வருவதில், கிறிஸ்து மீட்படையும் நிலைக்கு மனித வேதனையை உயர்த்தினார். எனவே வேதனையுறும் ஒவ்வொரு மனிதனும்,கிறிஸ்துவின் மீட்பில் பங்காளியாகின்றான்.

\- புனித 2ம் ஜோன் பவுல்

இந்த ஞாயிற்றுக்கிழமை முதல் வாசகத்தில், பேதுரு மிகவும் தைரியமான, தன்னம்பிக்கையான மனிதனாக காட்டப்படுகிறது. கூட்டத்திற்கு முன் நின்று, தானும் சீடர்களும் இயேசுவோடு இருந்ததையும் அவரது செயல்களை கண்கூடாக பார்த்ததையும் அறிவிக்கின்றார். மரணத்திற்கு இயேசு எவ்வாறு கையளிக்கப்பட்டார் என்பதையும் மரணத்திலிருந்து கடவுள் அவரை உயர்த்தினார் என்பதையும் அவர்களுக்கு நினைவுப்படுத்துகிறார். இப்போது, இயேசுவின் சீடர்கள், அவரது கட்டளையை ஏற்று அவரது செய்தியை அறிவிக்கின்றனர்.

ஆயினும், நற்செய்தி வாசகத்தில், வேறெரு பேதுருவையும் பார்க்கிறோம். கல்லறையிலிருந்து இயேசுவின் உடல் அகற்றப்பட்டிருப்பதாக மகதலா மரியா தெரிவித்த போது, யோவானுடன் பேதுரு விரைந்தார். நுழைவாயிலை அடைந்த போது, தயங்கி நின்றார் யோவான். ஆனால் பேதுருவோ தனக்கேக்குரிய தைரியமான முந்திக்கொள்ளும் சுபாவத்தால், கல்லறைக்குள் நுழைந்தார். சுற்றிப் பார்த்தார். துணிகளையும் இயேசுவின் தலையை மூடியிருந்த துண்டையும் கண்டார். அதன் பின் யோவானும் சென்று பார்த்தார், விசுவசித்தார். “இயேசு இறந்து உயிர்த்தெழ வேண்டும் என்னும் மறைநூல் வாக்கை அவர்கள் அதுவரை புரிந்து கொள்ளவில்லை” (யோவான் 20:9). பேதுருவைப் பொறுத்த வரை, இது குறித்துக் கொண்டாடுவதற்கு ஒன்றுமில்லை என கருதப்படுகெறிது. அவர்கள் கண்ட காட்சியை இதர சீடர்களிடம் பகிர்ந்து கொள்ள வேண்டிய அவசியத்ததை பேதுரு உணர்ந்திருக்கவில்லை. அவரும் யோவானும் இல்லம் திரும்பினர்.

இந்த நிகழ்வுகள் வழி, பேதுருவின் இருப்பக்கத்தையும் காண முடிகிறது. கல்லறைக்குள் நுழைந்த பேதுருவும் எருசலத்தில் மக்கள் கூட்டத்தினரிடையே பேசிய பேதுருவும் ஒரே மனிதரல்ல. உயிர்த்த ஆண்டவரைச் சந்தித்தப் பின், கிறிஸ்துவில் துணிவும் தன்னம்பிக்கையும் கொண்டவராக மாறினார். பேதுருவின் அனுபவம், “எனக்கு எப்படி?” என நமக்கு நாமே கேட்கத் தோன்றுகிறது. **“இந்த ஈஸ்தரில் எனது வாழ்வு எவ்வாறு மாறியுள்ளது?”** “ஆண்டவர் என்னோடு பேச அல்லது மனதைத் தொட எந்த வகையில் அவரை நான் அனுமதித்துள்ளேன்? அல்லது எனது வாழ்வில் மாற்றம் ஏற்படாததற்கு காரணம் என்ன?” கிறிஸ்துவில் நாம் மீட்கப்பட்டிருக்கிறோம் என்றால் நாம் அப்படியே இருந்து விட முடியாது என கொரிந்தியருக்கு எழுதிய முதல் கடிதத்தில் புனித பவுல் கூறுகிறார். பழைய ஆடையைக் கழற்றி விட்டு, புதிய ஆடையை அணிந்து கொள்ள வேண்டும். ஈஸ்தர், நமது வாழ்வில் வித்தியாசத்தை ஏற்படுத்த வேண்டும். இல்லையென்றால், ஒவ்வொரு ஆண்டும் திருச்சபை கொண்டாடும் இந்த பெருவிழாவின் அர்த்தத்தை புரிந்து கொள்ளாதவர்களாக நாம் இருப்போம்! ✝

### வாரம் ஒரு வசனம்

“இந்த ஈஸ்தரில் எனது வாழ்வு எவ்வாறு மாறியுள்ளது?”

INTERNAL CIRCULATION ONLY
BUL 13/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

**மனிதன், ஆசிரியர்களைக் காட்டிலும் சாட்சிகளை நம்புகிறான், அவன் ஆசிரியர்களை நம்பினால், அது அவர்கள் சாட்சிகளாக இருப்பதால்.**

- திருத்தந்தை 6ம் பவுல்

இந்த ஞாயிற்றுக்கிழமை நற்செய்தியில், இயேசுவின் சீடர்களில் ஒருவரான தோமா, சாவிலிருந்து இயேசு உயிர்த்ததையும் இதர சீடர்களுக்குக் காட்சி அளித்ததையும் நம்ப மறுக்கிறார். இதனால்தான், விசுவாசத்தில் குறையுள்ளோரையும் விசுவாசப் போதனையில் சந்தேகம் கொள்வோரையும் தோமாவிற்கு ஒப்பிடுவோம். ஆனால் சற்று ஆழமாக பார்த்தால், விசுவாசக் காரியத்தில் தெளிவையும் உண்மையையும் நாடுவோரையும் தோமாவிற்கு ஒப்பிடலாம். பல்வேறு எண்ணங்களும் கருத்துகளும் மலிந்து கிடக்கும் இன்றைய உலகச் சூழ்நிலையில், சில சமயங்களில் கருத்துத் தடையும் குழப்பமும் ஏற்படுவதால், தோமாவைப் போல் விசுவாசத்தின் அம்சங்களை நேர்மையாகவும் ஆழமாகவும் சிந்திக்க வேண்டியுள்ளளது.

ஆம், விசுவாசம் தொடர்புடைய கேள்விகள் அனைத்தும், காரண–காரியத்தாலும் அறிவாலும் மட்டும் விளக்கி விட முடியாது. இயற்கையாகவே நம்மிடம் இருக்கும் ஆற்றலை பயனுள்ள வகையில் பயன்பயடுத்திக் கொள்வதற்கு பல தடைகள் இருக்கின்றன. ஆயினும் கடவுள் கொடுத்துள்ள அறிவைப் பயன்படுத்தி உண்மையை நாம் நாடலாம். இயேசு உயிர்த்தெழுந்து விட்டார் என்பதற்கான ஆதாரத்தை தோமா கேட்ட போது, அவரது விசுவாசக் குறைவுக்காக கடிந்துக் கொண்டாலும், இயேசுவே முன்வந்து தோமா தேடும் ஆதாரத்தைக் காட்டினார். நேரில் பார்த்த தோமா நம்பினார்.

இயேசு உயிர்த்து விடடார் என்பதை தோமா நம்புவதற்கு ஆதாரமாக அவர் முன் தோன்றினார் இயேசு. அவ்வாறே கிறிஸ்துவின் மீது மற்றவர்கள் நம்பிக்கை வைப்பதற்கு நாம் யார் மற்றும் நாம் விசுவசிப்பது யாது என்பதற்கான ஆதாரத்தை முன்வைக்க வேண்டுமென கிறிஸ்துவர்களாகிய நம்மிடம் கேட்கப்படுகிறது. இதனை நமது சொல், செயல் வழி நாம் செய்து காட்ட வேண்டும். இன்றைய முதல் வாசகத்தில், மற்றவர்கள் மீது அக்கறை உண்டு என்பதன் அடையாளமாக, முதல் கிறிஸ்துவர்கள் தங்களது உடைமைகளைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் தங்களது விசுவாசத்தின் ஆதாரத்தைக் காட்டினார்கள். கடவுளை அன்பு செய்து, அவரது கட்டளையைக் கடைப்பிடிப்பதன் மூலம், ஒருவருக்கொருவர் கொள்ளும் அன்புக்கு ஆதாரமாக காட்ட முடியும் என இரண்டாவது வாசகத்தில் யோவான் கூறுகிறார். சுருக்கக்கூறின், கிறிஸ்துவர்கள் **சொல்வது போல் வாழ வேண்டும்.** இன்று, பொதுவாக கத்தோலிக்கர்கள் குறிப்பாக இளைஞர்கள், முன்னுதாரண மனிதர்களைத் தேடுகின்றனர். அச்சமற்ற இயேசுவின் சீடர்களை அவர்கள் தேடுகின்றனர். நமது வாழ்க்கை வழி நாம் முன்வைக்கும் ஆதாரம், உண்மையிலேயே கிறிஸ்துவில் நாம் மீட்படைந்திருக்கிறோமா என்பதைக் காட்டிவிடும். ✝

**வாரம் ஒரு வசனம்**

**சொல்வது போல் வாழ வேண்டும்.**

INTERNAL CIRCULATION ONLY
BUL 14/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

8 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 2ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



> தப்பு அல்லது பாவம் செய்யாமல் இருப்பது புனிதமாகாது... ஆனால் பழைய நிலையை விடுவதற்கும் மீண்டும் தொடங்குவதற்கான தயார்நிலைக்கும் அதற்கும் மேலாக மன்னிப்புக்கும் மனமாற்றத்திற்குமான நிலையை வளரச் செய்வதே புனிதமாகும்.
>
> - திருத்தந்தை 16ம் பெனடிக்

உயிர்த்தக் கிறிஸ்து சீடர்களுக்குத் தோன்றுவது குறித்து இந்த ஞாயிறு நற்செய்தி பேசுகிறது. இயேசு, தமது சீடர்களுக்கு எவ்வாறு தோன்றினார், அவர்கள் அதற்கு எவ்வாறு செயல்பட்டனர் என்பதை ஆழமாக பார்ப்போம். முதலில், அவர்கள் நடுவில் நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" எனக்கூறினார். பேயைக் கண்டது போல் சீடர்கள் பயந்து நடுங்கினர். அடுத்து, இயேசு அவர்களுக்கு தைரியம் சொல்லி, தமது கைகளையும் கால்களையும் பார்க்கும்படி கூறினார். தொட்டுப் பார்க்கும்படியும் அவர்களைக் கேட்டுக் கொண்டார். தமது கைகளையும் கால்களையும் காட்டினார். அவர்கள் மகிழ்ச்சி கொண்டாலும், அவர்கள் மனதில் அவநம்பிக்கையும் சந்தேகமும் படர்ந்திருந்தது.

அவர்களுக்கு இன்னும் நம்பிக்கை ஏற்படவில்லை என்பதை உணர்ந்த இயேசு, அவர்களிடம் சாப்பிடுவதற்கு ஏதாவது இருக்கிறதா எனக் கேட்டார். அவர்கள் கொடுத்த மீன் துண்டுகளைச் சாப்பிட்டார். அவர்களோடு இருந்த போது அவர் கற்பித்தவற்றை இயேசு நினைவுப்படுத்தினார். இதனால், மறைநூலை புரிந்து கொள்வதற்கு அவர்களின் மனதைத் திறந்தார். மெசியா பாடுபட வேண்டும், மூன்றாம் நாள் சாவிலிருந்து உயிர்ப்பெறுவதைக் கற்பித்தார். எல்லா நாடுகளுக்கும் அவரது பெயரால் மனமாற்றத்ததையும் மன்னிப்பையும் போதிக்கச் சொன்னார். இதற்கு நீங்களே சாட்சி என இயேசு கூறினார்.

நடப்பதை முன்பே போதித்திருந்தாலும், அடையாளம் காண்பதற்கும் உயிர்த்து விட்டதை ஒப்புக் கொள்ளவும் தடுமாறிய தமது சீடர்களுக்கு பொறுமையோடும் கனிவோடும் தம்மை வெளிபடுத்துகிறார் இயேசு. அவர்களைக் கடிந்து கொள்ளாமல், அவர்கள் அவரை அடையாளம் காண்பதற்கு உதவியாக, தமது பணி, மரணம், உயிர்ப்பு பற்றி எடுத்துக் கூறுகிறார். தூயவரான இயேசுவை கடவுள் அனுப்பியதை உலகம் அறிந்து கொள்ளத் தவறி விட்டது என முதல் வாசகத்தில் புனித பேதுரு கூறுகிறார். அவரது கட்டளையைக் கடைப்பிடித்தால் கடவுளை அறிய முடியும் என கிறிஸ்துவர்களுக்கு புனித யோவான் நினைவுறுத்துகிறார். கிறிஸ்து தொடர்ந்து நமக்கு தம்மை வெளிப்படுத்தி வருகிறார். இன்றும், பல்வேறு வழிகளில் நம்மோடு அமைதியாகவும் பொறுமையாகவும் பேசுகிறார். நாம் அவரது குரலைக் கேட்கிறோமா, **அவரது பிரசன்னத்தை நம்மிடையே உணருகிறோமா என்பதே பெரும் கேள்வி?** ✝

**வாரம் ஒரு வசனம்**

அவரது பிரசன்னத்தை நம்மிடையே உணருகிறோமா என்பதே பெரும் கேள்வி?

INTERNAL CIRCULATION ONLY
BUL 15/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

15 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 3ம் ஞாயிறு

## எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்




# அவரை அடையாளம் காண

மற்றவர்கள் நம்மை நேசிக்கா விட்டாலும், ஒவ்வொருடனும் கனிவோடும் அன்போடும் வாழ கற்றுக் கொள்வோம்.

- திருத்தநதை பிரான்சிஸ்

சில சமயங்களில் நாம் சந்திக்கும் நண்பர்களும் சரி தெரிந்தவர்களும் சரி, கடவுள் அவர்களை நேசிக்கிறார் என்பதை சந்தேகத்தோடு சொல்வார்கள். அவர்கள் மீது கடவுகளுக்கு அக்கறை இல்லை அல்லது அவர்களின் தேவைகளுக்கு மதிப்பளிப்பதில்லை என்ற எண்ணத்தால், கடவுளின் அன்பு குறித்த சந்தேகங்கள் எழுகின்றன. எடுத்துக்காட்டாக, நோயாளிக்காக செபிக்கும் செபம், பணக் கஷ்டத்திற்காக செபிக்கும் செபம், பதில் கிடைக்காமல் போய்விடுகின்றன. நமது குடும்பத்திற்கு துயரம் மீது துயரம் வரும் போது... “ஏன் எனக்கு?” “என் மீது கடவுளுக்குக் கருணை இல்லையா?” எனக் கேட்கிறோம்.

மனிதன் சிந்திப்பது போல கடவுள் சிந்திப்பதில்லை என இன்றைய வாசகங்கள் கூறுகின்றன. மேலும், மனிதன் நேசிப்பது போல கடவுள் நேசிப்பதில்லை. **கடவுள் அன்பு நிலையானது**, நிபந்தனையற்றது. தமது அன்பை கடவுள் எவ்வாறு வெளிபடுத்துகிறார் என்பது அவரது சித்தத்தையும் ஞானத்தையும் காலத்தையும் பொருத்தது. உலகத்தை மீட்பதற்காக சிலுவை சாவை ஏற்கும் அளவிற்கு நமக்காக தமது ஒரே மகனை அனுப்பியதில், கடவுளின் அன்பின் வெளிப்பாடு சிகரத்தைத் தொடுவதோடு ஆழத்தையும் புலப்படுத்துகிறது. உயர் தியாகத்தை வெளிப்படுத்தும் அன்பிற்கு இதை விட மேலானது உண்டோ?

தந்தையாகிய கடவுள் நம்மை அன்பு செய்வதால், யோவான் எழுதிய முதல் கடிதத்தில் குறிப்பிட்டிருப்பது போல, இயேசு கிறிஸ்து வழியாக நாம் அனைவரும் கடவுளின் பிள்ளைகளாக அழைக்கப்படுகிறோம். காரணம் கடவுள் நம்மை அன்பு செய்கிறார். இதனால்தான் திருத்தூதர் பணிகளை எழுதியவர், “இவராலேயன்றி வேறு எவராலும் மீட்பு இல்லை. ஏனென்றால் நாம் மீட்புப் பெறுமாறு வானத்தின் கீழ், மனிதரிடையே இவரது பெயரன்றி வேறு எந்த பெயரும் கொடுக்கப்படவில்லை” என கூறுகிறார். காரணம் கடவுள் நம்மை அன்பு செய்கிறார், இயேசுவே கூறியிருக்கிறார், “நல்ல ஆயன் நானே. தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அது போல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன்”.

உலகில் “அன்பு” என்ற வார்த்தைக்கு பல்வேறு மனிதர்களில் பல்வேறு அர்த்தங்கள் வரும். ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம், கடவுள் நம்மை அன்பு செய்கிறார்! இல்லையென்றால், நம்மை மீட்பதற்கு இயேசுவை அனுப்பியிருக்க மாட்டார். வாழ்க்கையில் குறைபாடுகள் ஏற்படும் போது கடவுள் நம்மை நேசிக்கிறாரா என எண்ணத் தோன்றும். கடவுள் பார்க்கிறார், கவனிக்கிறார், நமது குறைபாடுகளுக்கு அப்பால், முழுமையான கண்ணோட்டத்தில் அவர் நோக்குகிறார். அவர் நம்மை அன்பு செய்வதால், நாம் நினைப்பதை விட அவரது முகம்(படம்) மிக அழகாக தெரியும். ✝

**வாரம் ஒரு வசனம்**

கடவுள் அன்பு நிலையானது

INTERNAL CIRCULATION ONLY
BUL 16/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

22 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 4ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்



Image: ©123rf.com

## கிறிஸ்துவில் மீட்படைந்தோம்

# நேசிக்க

கிறிஸ்து அழைக்கிறார், திருச்சபைக்கு நீங்கள் தேவை, திருத்தந்தை உங்களை நம்புகிறார், உங்களிடமிருந்து மேன்மையான காரியங்களை அவர் எதிர்பார்க்கிறார்.

-திருத்நதை 2ம் ஜோன் பவுல்

இன்றைய ஞாயிறு நற்செய்தி வாசகத்தில் "இணைந்து இருங்கள்" பலமுறை வருகின்றது. ஏதாவது ஒன்றோடு உறுதியாக, இறுதியாக, நீடித்த, நிரந்திரமாக பிடித்துக் கொள்ள அல்லது தொடர்பு கொள்ள வேண்டும் என்ற பொருளை அது தருகிறது. எளிதாக அசைக்கவோ அகற்றவோ முடியாது. ஆகவே, "என்னோடு இணைந்திருங்கள்" இயேசு கூறுவது, வாழ்வின் எந்தவொரு சூழ்நிலையிலும் சவால்மிக்க காலங்களிலும் உறுதியாக, வலுவாக, விட்டுக்கொடுக்காத உறவைப் பற்றியே.

இயேசுவோடு மேலோட்டமான உறவோடு நாம் நின்று விட்டால், இயேசுவின் பயனுள்ள சீடர்களாகும் தகுதியை இழந்து விடுகிறோம். "என்னோடு இணைந்து இராதவர் கொடியைப் போலத் தறித்து எறியப்பட்டு உலர்ந்து போவார். அக்கொடிகள் கூட்டிச் சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படும்." திராட்சை தோட்டச் சொந்தக்காரர் கொடிகளின் பலவீனமான அல்லது பழுதடைந்த கிளைகளை கழித்துக் களை எடுப்பதை இயேசு இங்கு குறிப்பிடுகிறார். கொடியில் முக்கியமான பகுதியாக திராட்சை செழிப்பாகவும் ஆரோக்கியமாக வளர்வதற்கு இது முக்கியம். கொடியுடன் "பலவீனமான" இணைப்பைக் கொண்டிருக்கும் கிளைகள் துண்டிக்கப்படும் என்பதே இதன் பொருள்.

எனவே, நாம் கேட்க வேண்டிய கேள்வி, "எவ்வகையான உறவை இயேசுவோடு வைத்திருக்கிறோம்?" "அது வலுவானதா, உறுதியானதா, எந்த சூழ்நிலையிலும் நிலைத்து நிற்குமா?" ஆம், நமது சீடத்துவத்ததை மேலும் வலுப்படுத்த, உறுதிப்படுத்த, நிலைத்திருக்க கடவுள் கழித்து விடுவார். உங்கள் உறவு உங்களது எண்ணங்களையும் போக்கையும் உணர்வையும் பொருத்தது. பொல்லாத காலத்தில் அவர் மீது நம்பிக்கை இல்லாமல் இருந்தால், இயேசுவுடனான உங்கள் சீடத்ததுவம் பலவீனமானதாக இருக்கும்.

நாம் பயன் தரக்கூடிய ஆரோக்கியமான கிளைகளாக.. இயேசுவில் உறுதியோடு இணைத்திருக்க வேண்டுமென கடவுள் விரும்புகிறார். பெயர் அளவில் மட்டும் கிறிஸ்துவர்களாக இருப்பது மட்டும் போதாது, இயேசுவில் இணைந்திருக்கக வேண்டும். அவரது நித்திய அன்பிலிருந்து எதுவும் அசைக்கவோ பிரிக்கவோ முடியாது. **நீங்கள் உண்மையிலேயே இயேசுவில் நிலைத்திருக்கிறீர்களா?** ✝

## வாரம் ஒரு வசனம்

நீங்கள் உண்மையிலேயே இயேசுவில் நிலைத்திருக்கிறீர்களா?

INTERNAL CIRCULATION ONLY
BUL 17/2018

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

*Print:* Steno Print Sdn Bhd
*Design:* The Mustard Seed Studio

29 ஏப்ரல் 2018

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலம் 5ம் ஞாயிறு

எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்




Image: ©123rf.com